

தமிழ்நாடு அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சுயசான்று அடிப்படையில் உடனடி கட்டிட ஒப்புதல் என்ற முன்னோடி திட்டத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை அவர்களை பிளாட் ப்ரோமோட்டர்ஸ் அசோசியேஷன் சென்னை சவுத் தாம்பரம் சங்க தலைவர் கோமதி சங்கர், துணை தலைவர் கோபி, செயலாளர் தினேஷ், தாம்பரம் மேற்கு மண்டலத்தலைவர் எஸ்.இந்திரன் அவர்களின் மகன் பொருளாளர் ஐ.வினோத் சிங் ஆகியோர் சந்தித்து சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவித்தனர். உடன் அமைச்சர்கள் சு.முத்துசாமி, பி.கே.சேகர்பாபு ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு அரசின் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று (25.07.2024) புதுதில்லியில், ஒன்றிய அரசின் ஜல் சக்தி துறை அமைச்சர் சி.ஆர். பாட்டீல் அவர்கள் மற்றும் ஒன்றிய ஜல் சக்தி துறை இணை அமைச்சர்கள் வி.சோமண்ணா, ராஜ் பூஷன் சௌத்திரி ஆகியோரை சந்தித்து, தமிழ்நாட்டின் பன்மாநில நதிநீர் பிரச்சினைகள், நதிநீர் இணைப்பு திட்டங்களை செயல்படுத்துதல், பாசன கட்டமைப்புகளை சீரமைக்கும் திட்டங்களுக்கு நிதியுதவி பெறுதல் ஆகிய கோரிக்கைகள் அடங்கிய மனுவினை வழங்கினார். இந்நிகழ்வின் போது தமிழ்நாடு அரசின் புதுதில்லிக்கான சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தமிழ்நாடு அரசின் நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், தமிழ்நாடு அரசின் கூடுதல் உள்ளுறை ஆணையாளர் (தமிழ்நாடு இல்லம்) ஆஷிஷ் குமார், காவிரி தொழில்நுட்பக் குழு தலைவர் ஆர்.சுப்பிரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமை! ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் - தமிழ்நாட்டை வஞ்சித்த

# பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து தாம்பரத்தில் நாளை கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டம் முழுவதும் கழகத்தினர் திரண்டு வரும்படி அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜூலை.26

ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் மாற்றாந்தாய் மனப்போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்துவரும் பாசிச பா.ஜ.க ஒன்றிய அரசைக் கண்டித்து, நாளை 27ஆம் தேதி சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் தாம்பரம் சண்முகம் சாலையில், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள் தலைமையில், மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற உள்ளது என்றும், இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டம் முழுவதில் இருந்து கழகத்தினர் ஆயிரக்கணக்கில் அணி திரண்டு பங்கேற்க வேண்டும் என்றும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

20242025 ஆம் ஆண்டின் ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கை, ஒட்டு மொத்த இந்திய திருநாட்டிற்கான நிதி நிலை அறிக்கையாக தெரியவில்லை.

மாறாக மோடி தலைமையிலான அரசு, தனது ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக. சில மாநிலங்களுக்கு மட்டும், நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்



சியில் பெரும்பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற எதிர் கட்சி ஆளும் மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கும் வகையில், இந்த ஆண்டின் நிதி நிலை அறிக்கை அமைந்திருக்கிறது.

தமிழ்நாடு சந்தித்த 2 தொடர் பேரிடர் இழப்புகள், மெட்ரோ ரயில் திட்டம் ஆகியவற்றிற்கு நிதி அவசியம் வழங்கிட வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் முன் வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்து சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை வாரி வழங்கியுள்ளது.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில், மாற்றாந்தாய் மனப்போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்துவரும் பாசிச பா.ஜ.க ஒன்றிய அரசைக் கண்டித்து, நாளை 27ஆம் தேதி சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் மாவட்ட தலைநகரங்களில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடத்திட வேண்டும் என்று தலைமைக் கழகம் அறிவித்ததற்கிணங்க,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் பாசிச பா.ஜ.க அரசைக் கண்டித்து நாளை 27 ஆம் தேதி காலை 10.00 மணியளவில் கழகப் பொருளாளர் - கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர். பாலு எம்.பி., அவர்கள் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

தாம்பரம் மாநகர தி.மு. கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

மாவட்டக்கழக அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதன்ன எம்.எல்.ஏ, து.மூர்த்தி மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ,விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி இக்கண்டன ஆர்பாட்டத்தை முடித்து வைத்து கண்டன உரையாற்றுகிறார்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து ஒன்றிய - நகர - பகுதி - பேரூர்களில் அடங்கி உள்ள வார்டு - கிளைகளில் இருந்து கழகத்தினர் அனைவரும் ஆயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்கும் படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தாம்பரத்தில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பது "நமது கடமை நமது உரிமை" என்ற அந்த உணர்வோடு மாவட்டம் முழுவதிலும் இருந்தும் கழகத்தினர் அனைவரும் தமது கரங்களில் கழகத்தின் இரு வண்ணக்கொடியை ஏந்தி ஆயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்று, நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறி உள்ளார்.

### ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் தமிழ் நாட்டை வஞ்சித்த

# பா.ஜ.க. அரசைக் கண்டித்து நாளை காஞ்சிபுரத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.அறிக்கை!

காஞ்சிபுரம்,ஜூலை,26

ஒன்றிய பா.ஜ.க.அரசின் நிதி நிலை அறிக்கையில் தமிழ் நாடு முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டுள்ளது மட்டுமின்றி தமிழ் நாடு என்ற வார்த்தையே அதில் இடம்பெறவில்லை இதனை கண்டித்து தலைமைக் கழகத்தின் அறிவுறுத்தலின் படி நாளை காலை காஞ்சிபுரத்தில் மாபெரும் கண்டனம் ஆர்ப்பாட்டம் நடைபெறுகின்றது என்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்டச் செயலாளர் க.சுந்தர்எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒன்றிய பா.ஜ.க. அரசின் நிதி நிலை அறிக்கை கடந்த 23 ஆம் தேதி அன்று ஒன்றிய நிதி நிலை அறிக்கையை அமைச்சர் நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். அந்த நிதி நிலை அறிக்கையில் தமிழ் நாடு என்ற சொற்றுடரே இடம் பெறவில்லை என்பது மட்டுமல்ல தமிழ் நாட்டிற்கு எந்த திட்டமும் அறிவிக்கப் படவில்லை.

இதற்கு உடனடியாக கழகத் தலைவர் முதல்வர்



மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்ததுடன் பிரதர் மோடி தலைமையில் நாளை (27 ஆம் தேதி) நடைபெறவிருக்கும் நிதி ஆயோக் மாநாட்டிலும் கலந்து கொள்ளப்போவதில்லை என்று அறிவித்தார்.

இதே போன்று இந்தியா கூட்டணிகட்சிகள் ஆட்சி செய்யும் பெரும்பாலான மாநில முதலமைச்சர்களும் பிரதமர் தலைமையில் நடைபெறும் நிதி ஆயோக் மாநாட்டினை புறக்கணிக்கப் போவதாக தொடர்ந்து அறிவித்து வருகின்றனர்.

அது மட்டுமின்றி கழகத்தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூகவலைதளப் பதிவில் தோற்கடித்தவர்களை பழி வாங்க வேண்டாம்,பிரதமர் அவர்களே ; தாங்கள் தனிமைப்படுத்தப்படுவீர்கள் என்றும் ஆணித்தரமாக கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் தலைமைக் கழகம் சார்பில் நேற்றைய அறிவித்த அறிவிப்பில்,

ஒன்றிய நிதி நிலை அறிக்கையில்தமிழ் நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாவட்ட தலைநகரங்களில் 27 ஆம் தேதி அன்று (நாளை) காலை 10 மணி அளவில் மாபெரும் கண்டனம் ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டுமாய் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன் படி காஞ்சிபுரம் தெற்கு மாட்டக் கழகம் சார்பில் நாளை 27.7.2024 சனிக்கிழமை அன்று காலை 10 மணி அளவில் மாவட்ட தலைநகரான காஞ்சிபுரத்தில் காஞ்சிபுரம் காவலன் கேட் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகின்றது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி,தமிழ் நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகள் ஆகியவற்றிற்கு நிதி வழங்கிட வேண்டுமேன்று முதல்வர் கழகத் தலைவர் அவர்கள் முன் வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்து சில மாநிலங்களுக்கு கேட்டகும் பேரிடர் நிதி அள்ளி வழங்கப்பட்டுள்ளது என்பதை எடுத்து சொல்லி கண்டன முழக்கம் இந்த ஆர்ப்பாட்டத்தில் எதிரொலித்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

எனவே இந்த காஞ்சிபுரம் காவலன் கேட் அருகில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெரும் இந்த ஆர்ப்பாட்டத்தில்

நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர ,ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், மாநில .மாவட்ட. மாநகர.

ஒன்றிய. நகர பேரூர் கழக. அணிகளின் நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் நாளை(27.7.2024) காலை 9.30 மணிக்கே தவறாமல் கலந்து கொண்டு ஒன்றிய பா.ஜ.க.அரசுக்கே எதிராக கண்டன முழக்கிமிட திரளாக கலந்துகொள்ளும் படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.கேட்டுக் கொண்டுள்ளார்.



உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (25.07.2024) திண்டுக்கல் மாவட்டம், பழனி, பழனி ஆண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்று வரும் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கான முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், தவத்திரு மயிலம் பொம்மபுர ஆதீனம், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் அ.பிரதீப், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி சி.ஹரிப்ரியா, தலைமை பொறியாளர் பொ.பெரியசாமி, இணை ஆணையர்கள் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் உள்ளனர்.

### ஆஸ்திரேலியா

# டாஸ்மானியா வேளாண்மை பல்கலைக்கழக பேராசிரியருடன் ஆலோசனை!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மேற்கொண்டார்!

மெல்போர்ன், ஜூலை.26-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பாக மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டுப்பணிகள் தொடர்பான ஆராய்ச்சிகள், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பான பணிகளுக்காக வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் தலைமையிலான குழு ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அரசுமுறை பயணமாக சென்றுள்ளனர். இக்குழுவில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலர், வேளாண்மை உழவர் நலத் துறை மற்றும் உயர் அதிகாரிகள் உடன் சென்றுள்ளனர்.

இப்பயணத்தின் இரண்டாம் கட்டமாக நேற்று 25.07.2024 ஹோபர்ட் நகரத்தில் உள்ள டாஸ்மானியா வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பல்துறை வல்லுநர்களுடன் கலந்துரையாடல் மற்றும் தொழில்நுட்பங்கள் தொடர்பான கருத்து பரிமாற்றங்கள் வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் மேற்கொள்ளப் பட்டது.

இந்த கலந்துரையாடலின் போது தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட "மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்" என்ற திட்டத்தின் தொடர்ச்சியாக தமிழக விவசாய நிலங்களின் மண் வளத்தை பெருக்கி விவசாயிகள் தரமான உணவு உற்பத்தியை செய்திட தேவையான மண் வள ஆராய்ச்சிகள் தொடர்பான உயர் தொழில் நுட்பங்கள் குறித்து, டாஸ்மானியா வேளாண்மை பல்கலைக்கழக மண்வளத் துறை சார்ந்த பேராசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. மேலும், அறுவடைக்கு பின் ஏற்படும் இழப்புகளை தடுப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் ஆலோசிக்கப் பட்டது. பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் உலக வெப்பமயமாதல், பருவமற்ற காலங்களில் மழை பொழிவு,

அதி கனமழை பொழிதல், பயிர்களில் அதிக பூச்சி தாக்குதல், வறட்சி, வெள்ளம் போன்றவற்றிலிருந்து பயிர்களை காப்பது தொடர்பான முன்னெச்சரிக்கை தொழில்நுட்பங்கள் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது. மின்னனு வேளாண்மை, உணவு பதப்படுத்துதல் ஆகியவற்றில் டாஸ்மானியா வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் பின்பற்றப்படும் உயர் தொழில் நுட்பங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டன. மேலும், உயர் தொழில்நுட்பங்களை கொண்டு சத்தான பழவகைகள் மற்றும் காய்கறிகளை விளைவிப்பது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

இக்கலந்தாயவில் வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர், திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலர், செல்வி. அபூர்வா, இ.ஆ.ப., தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணை வேந்தர், பேராசிரியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

டாஸ்மானியா பல்கலைக்கழகத்தில் பின்பற்றப்படும் வேளாண்மை தொழில்நுட்பங்கள் மற்றும் உயர் தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும்.

### பழனியில் ஆக.24,25 தேதிகளில்

# அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு வெற்றிகரமாக அமையும்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு தகவல்!

பழனி,ஜூலை.26-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் தலைமையில் நேற்று (25.07.2024) பழனி, பழனி ஆண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி கூட்டரங்கில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு தொடர்பாக அனைத்துத் துறை அரசு அலுவலர்களின் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகம், காவல்துறை, வருவாய்த்துறை, திருக்கோயில் நிர்வாகம், நகராட்சி நிர்வாகம், பேலுராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் துறை, சுகாதாரத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, நெடுஞ்சாலைத்துறை, நீர்வளத்துறை, பொதுப்பணித் துறை, போக்குவரத்துத்துறை, உணவு பாதுகாப்புத்துறை, மின்சார வாரியம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆகிய துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட துறைகளின் அலுவலர்கள் விவரித்தனர்.

**இதில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு மாநாடு தொடர்பாக ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கி பேசியதாவது,**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 27.02.2024 அன்று நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு ஆகஸ்ட் மாதம் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் நடத்தப்பட உள்ளது. இந்த மாநாட்டை சிறப்பாக நடத்துவதற்கு மாவட்ட அமைச்சர்கள், பழனி சட்டமன்ற உறுப்பினர், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர், திருக்கோயில் அறங்காவலர் குழுவினர் ஆகியோர் காட்டி வரும் ஈடுபாடு மற்றும் ஒத்துழைப்பானது இம்மாநாடு வெற்றிகரமாக அமையும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

இந்த அரசு பொறுப்பேற்றபின் அறுபடை வீடுகள் மற்றும் அறுபடை வீடு மற்றும் இதர முருகன் திருக்கோயில்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் பல்வேறு திருப்பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. திருச்செந்தூரில் ஒட்டுமொத்தமாக ரூ. 400 கோடி மதிப்பீட்டிலும், பழனி



யில் அனைத்து முருகப் பக்தர்களும் பாராட்டும் வகையில் நடைபெற்ற திருப்பணிகள் மற்றும் குடமுழுக்கு, திருப்பரங்குன்றத்தில் ரூ. 70 கோடி மதிப்பீட்டிலும், திருத்தணியில் ரூ.160 கோடி மதிப்பீட்டிலும், சுவாமிமலையில் மின்தூக்கி மற்றும் இதர பணிகள் ரூ.20 கோடி மதிப்பீட்டிலும், பழமுதிர்சோலையில் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதோடு, அழகர்கோயிலில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் மாஸ்டர் பிளான் பணிகள் நடைபெற்று வருவது முருகனின் புகழுக்கு பெருமை சேர்ப்பதாகும்.

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கு இரண்டு நாட்களிலும் சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால் அவர்களுக்கு தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பிட வசதி, மருத்துவ வசதி, போக்குவரத்து வசதி போன்றவற்றை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும். குப்பைகளை உடனுக்குடன் அகற்றிடும் வகையில் திருக்கோயில் நிர்வாகம் மற்றும் நகராட்சி நிர்வாகத்தின் மூலம் கூடுதலாக தூய்மைப் பணியாளர்களை நியமனம் செய்திட வேண்டும். மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூத்தக் குடிமக்கள் பயன்படுத்துகின்ற வகையில் பேட்டரி கார்கள் மற்றும் வீல் சேர்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். திருக்கோயில் நிர்வாகத்தின் மூலம் வருகைதரும் அனைத்து பக்தர்களுக்கும் உணவு வழங்க நடவடிக்கை மேற்கொள்வதோடு, இதற்காக தனித்தனியாக உணவு அரங்குகளை ஏற்படுத்த வேண்டும். மேலும், முதலுதலி, அவசர சிகிச்சை தேவைப்படும் போது மருத்துவ உதவி அளித்திடும் வகையில் அரசு மருத்துவ குழுக்களோடு அப்பல்லோ, இராமச்சந்திரா மற்றும் காவேரி மருத்துவமனைகளின் மூலம் சிறப்பு மருத்துவக் குழுக்களை ஏற்படுத்த வேண்டும். இம்மாநாட்டிற்காக 5 ஆய்வரங்கங்கள் அமைக்கப்பட்டு ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்படவுள்ளன. இம்மாநாட்டின் இரண்டு நாட்களிலும் நீதியரசர்கள் 15க்கும் மேற்பட்ட ஆதீன பெருமக்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து முக்கிய பிரமுகர்கள் பங்கேற்க உள்ளனர். அறுபடை வீடு அரங்கங்கள், சிறப்புப் புகைப்பட கண்காட்சி, வேல்கோட்டம், 3D நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய காட்சியரங்கம், ஆன்மிக கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்கம் போன்றவை மிகச் சிறப்பாக நடத்தப்பட உள்ளது. இம்மாவட்ட அமைச்சர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் கண்காட்சியினை மேலும் நீட்டித்து வழங்க வேண்டுமென கோரினார்கள். ஆகவே, மாநாடு நிறைவு பெற்றபின் மேலும் ஒருவார காலம் இக்கண்காட்சி நடத்தப்படும். மாநாடு நிறைவுபெற்ற பின் உலகம் முழுவதுமுள்ள முருகப் பக்தர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் பாராட்டுகின்ற சூழலை உருவாகும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

**உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி பேசியதாவது,**

பழனியில் நடைபெறும் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு சிறப்பாக அமைந்திட வேண்டும் என்பதற்காக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் இதுவரை 10 கூட்டங்களை நடத்தியுள்ளார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மேற்கொண்ட நடவடிக்கைகளால் பழனி திருக்கோயிலுக்கு மிகச் சிறப்பாக குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதோடு, இத்திருக்கோயிலின் சார்பில் புதிய கல்லூரி தொடங்கப்பட்டு ஏழை, எளிய மாணவர்கள் கல்வி பயிலும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கு அரசு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்படும் பணிகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் விளக்கியுள்ளனர். திருச்செந்தூர் முருகன் திருக்கோயிலுக்கு மாஸ்டர் பிளான் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை போல் பழனி திருக்கோயிலுக்கும் பணிகளை மேற்கொள்ள சுமார் 58 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் திருப்பதிக்கு இணையாக பழனி திருக்கோயிலும் அமையும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநாட்டினால் பழனி திருக்கோயில் பல்வேறு சிறப்புகளையும், வளர்ச்சிகளையும் பெறும்.

திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள பல்வேறு திருக்கோயில்களில் திருப்பணிகளும், குடமுழுக்குகளும் நடைபெற்று வருகிறது. அதற்காக மாவட்ட மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு அனைத்து வகையிலும் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும், நானும், சட்டமன்ற உறுப்பினர்களும், மாவட்ட நிர்வாகமும் அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்து உறுதுணையாக இருப்போம் என தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னதாக, அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மாநாடு நடைபெற உள்ள மைதானத்தை பார்வையிட்டு, மாநாட்டு அரங்கம், உணவுக் கூடம், வாகனங்கள் நிறுத்துமிடம், ஆய்வரங்கம், அறுபடை வீடுகளின் அரங்கங்கள், புகைப்படக் கண்காட்சி, 3D தொழில்நுட்பத்துடன் கூடிய காட்சி அரங்கம் அமைக்கப்படும் இடங்களை நேரில் பார்வையிட்டு அலுவலர்களுக்கும், பொறியாளர்களுக்கும் அறிவுரைகளை வழங்கினர்.

இக்கூட்டத்தில் பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், தவத்திரு மயிலம் பொம்மபுர ஆதீனம், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா. பூங்கொடி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் அ.பிரதீப், இ.கா.ப., இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி சி. ஹரிப்ரியா, தலைமை பொறியாளர் பொ.பெரியசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் ஹா.ஷேக் மொகைதீன், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் ச.இலட்சுமணன், பொ.ஜெயராமன், திருமதி கோ.செ.மங்கையர்க்கரசி, திருமதி பா.பாரதி, எ.டி. பரஞ்ஜோதி, கே.செல்லதுரை, எ.ஆர்.பிரகாஷ், எம்.அன்புமணி, செ.மாரிமுத்து, திருக்கோயில் அறங்காவலர்கள் ச. மணிமாறன், கே.எம்.சுப்பிரமணியன், ரா.ராஜசேகரன், திருமதி ஜெ.சத்யா மற்றும் அரசு துறை அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.